**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**<u>அ.வ.எண்.103/2023</u>**

**நாள்– 31.07.2026**

**வா.சா. 1 – பாப்பாத்தி**

**<u>குறுக்கு விசாரணை:</u>**

1) நான் சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுகா, வரநல்லாம்பாளையம், ஆலத்தூரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது கணவர் காணாமல் போன 2013ம் வருடம் நான் குமாரபாளையம் ஐயம்பாளையத்தில் குடியிருந்து வந்ததற்கான ஆதாரங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, வா.சா.ஆ.6 தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.6ல் உள்ள முகவரி ஆலத்தூர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் எனது கணவர் ராஜஸ்தான் சென்ற பின்பு வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 03.08.2013 தேதியில் குமாரபாளையம் சரவணா தியேட்டர் அருகில் சென்று பார்த்த போது எனது கணவர் அங்கு இல்லை என்பதால் வா.சா.ஆ.1 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். சரவணா தியேட்டர் அருகே உஷாராணி என்பவருடன் எனது கணவர் வாழ்ந்து வந்ததற்கான ஆதாரங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அசையா சொத்துக்கள் அனைத்தும் வரநல்லாம்பாளையம், ஆலத்தூரில் தான் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் இங்கு தான் வாழ்ந்து வந்தார் என்றாலும், குமாரபாளையம் தாலுகாவில் தான் காணாமல் போனார் என்பதை நிரூபணம் செய்ய தகுந்த சாட்சியங்களைத் தாக்கல் செய்யாததால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை)**